செ.வெ.எண் : 22/ஜூலை நாள் : 20.07.2020

**இராமநாதபுரம் மாவட்டம்**

# முதியோர்களுக்கு எதிரான கொடுஞ்செயல் எதிர்ப்புதினத்தையொட்டி மூத்த குடிமக்களுக்கு அத்தியாவசிய உணவுப்பொருட்கள்

## மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கொ.வீர ராகவ ராவ்,இ.ஆ.ப.,அவர்கள் வழங்கினார்.

இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் சமூக நலத்துறையின் சார்பாக மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கொ.வீர ராகவ ராவ்,இ.ஆ.ப., அவர்கள் முதியோர்களுக்கு எதிரான கொடுஞ்செயல் எதிர்ப்பு தினத்தையொட்டி மூத்த குடிமக்களுக்கு அத்தியாவசிய உணவுப் பொருட்கள் அடங்கிய தொகுப்புகளை இன்று (20.07.2020) வழங்கினார்.

தமிழக மக்களின் குடும்ப அமைப்பில் பெற்றோர்கள் மற்றும் மூத்த குடிமக்களை மதித்தல், பராமரித்தல் என்பது ஒரு அங்கமாக தொன்று தொட்டு இருந்து வருகின்றது. இருப்பினும் உலகளவில் முதியவர்கள் மீது ஏற்படுத்தப்படும் மனித உரிமை மீறல்கள் என்பது பெரும் பிரச்சனையாக நிலவுகிறது. இத்தகைய சூழ்நிலைகளில் முற்றிலுமாக தடுப்பது நமது அனைவரது கடமையாகும். தமிழ்நாடு அரசு சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறையின் மூலம் மூத்த குடிமக்கள் மற்றும் பெண்களின் நலனை பாதுகாத்திடும் விதமாக பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. மூத்த குடிமக்களின் பாதுகாப்பினை உறுதிசெய்து அவர்களுக்கான உரிமைகளை வழங்குவதன் அவசியம் குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்திடும் நோக்கில் ஆண்டுதோறும் ஜுன் 15-ம் நாள் முதியோர்களுக்கு எதிரான கொடுஞ்செயல் எதிர்ப்பு தினமாக கடைபிடிக்கப்பட்டு வருகிறது.

சமூக நலத்துறை மற்றும் தொழிலாளர் நலத்துறை ஒருங்கிணைந்து, மாவட்டத்தில் தற்போது செயல்படுத்தப்பட்டுள்ள முழு ஊரடங்கு காலத்தில் ஆதரவற்றோர் இல்லங்களில் வசிக்கும் மூத்த குடிமக்கள் 100 நபர்களுக்கு நிவாரணமாக 10 கிலோ அரிசி, 1லி எண்ணெய், 1 கிலோ பருப்பு உள்ளிட்ட அத்தியாவசிய உணவுப்பொருட்கள் அடங்கிய தொகுப்புகளை வழங்கப்படவுள்ளது. அதன்படி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கொ.வீர ராகவ ராவ்,இ.ஆ.ப., அவர்கள் 5 மூத்த குடிமக்களுக்கு அத்தியாவசிய உணவுப்பொருட்கள் அடங்கிய தொகுப்புகளை வழங்கினார். மேலும், முதியவர்கள் தற்கால இளைஞர்களிடம் எதிர்பார்ப்பது அன்பும், மரியாதையுமேயாகும். எனவே இளைஞர்கள் தங்களது பெற்றோர்கள் மட்டுமல்லாது நம்மைச் சுற்றியுள்ள முதியவர்கள் அனைவரிடத்திலும் அரவணைப்போடு நடந்து கொள்ள வேண்டும் என தெரிவித்தார்.

இந்நிகழ்வின் போது, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திரு.ஜி.கோபு, மாவட்ட சமூக நல அலுவலர் (பொ) திருமதி.வை.ஜெயந்தி உட்பட அனைத்துத்துறை அரசு அலுவலர்களும் உடனிருந்தனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்.**